ராணி காமிக்ஸ்
முகமூடி வீரர் மாயாவி தோன்றும்
எங்கே இளவரசி?
ரூ. 3

சேமிப்பு!

—தளவை. இளங்குமரன்

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு!
தேவையைச் சுருக்கிச் சேமிப்பில் போடு!
நரைதிரை மூப்பினில் நமதிடர்ப் பாடு,
நலிவினைத் தீர்ப்பதில் அதற்கிலை ஈடு!

பொருளெனும் அச்சு ஆணியில் லாது
பூமியில் வாழ்க்கைத் தேர்உரு ளாது!
வரவினில் மிச்சம் சிறிதுமில் லாது
வந்ததை எல்லாம் செலவிடல் தீது!

ஒருவிதை பூமியில் விழுந்தது நீடு
ஓங்கி வளர்ந்து உயர்ந்திடும் காடு!
சிறுதுளி ஆறெனப் பெருகுவ தோடு
சேமிப்பு ஏற்றிடும் செல்வத்தின் மேடு!

வரைமுறை மீறிய வறுமையின் கோடு
வாழ்வினில் மறைந்து வளமுறும் வீடு!
நறுமலர் தூவிய வழியினில் பீடு
நடையுடன் விரைந்து நலமுறும் நாடு!

ராணி காமிக்ஸ் – 292
(மாதம் இருமுறை இதழ்)
ஆகஸ்டு 16 – 31
1996



எங்கே இளவரசி

ஒரு நாள் டயானா மாயாவியைக் காண அடர்ந்த காட்டுக்குள் வந்தாள். மாயாவி டயானாவை மண்டைஓட்டுக்குகையில் இருக்கும் கருவூல அறைக்கு அழைத்துச் சென்றார்.
உங்கள் அப்பா இதையா சின்ன அறை என்று சொன்னார்!
ஆமாம்!
அடுத்த அறை—
ஆனால், முக்கியமான அறை இதுதான்!
இங்கு அலெக்சாந்தரின் வாள், ரேர்லண்டின் ஊதுகுழல் என்று பல முக்கிய பொருட்கள் பாதுகாக்கப் படுகின்றன!
இதை ஒரு அருங்காட்சியகம் என்றே சொல்லலாம்!
அலெக்சாந்தரின் வைரக்கோப்பைதான் எனக்குப் பிடித்திருக்கிறது!
இது அலெக்சாந்தரிடமிருந்து சீசருக்கு வந்தது. பிறகு சாலமென் பிறகு மமூது கைக்கு வந்தது!

மழுதுவிடம் இருந்து இங்கே எப்படி வந்தது?
மூன்றாம் நூற்றாண்டில் நடந்த கதை! சேக்ஸ்பியர் இயக்கிய நாடகத்தில் பெண் வேடமணிந்த என் முன்னோருக்கு இது கிடைத்தது!
அதற்குரிய குறிப்பு இந்த நூலகத்தில் இருக்கிறது! படிக்கிறாயா?
நீங்கள் சொன்னால் நான் கேட்கிறேன்!
மாமா! நாங்களும் கேட்கிறோம்!
வைரக்கோப்பைப் பற்றிய கதை முதல் தொகுதியிலிருக்கிறது!
20–ம் நூற்றாண்டு வரை இருந்த மாயாவிகள் அனைவருமே வீரக் கதையை எழுதி வைத்திருக்கிறார்களா?
ஆமாம்! 21–ம் நூற்றாண்டு வரலாற்றில் நீயும் நிச்சயம் இடம்பெறுவாய்!

மாயாவியின் மகன்களுக்கு 12 வயது ஆனதும் படிப்பதற்கு வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப் படுவார்கள்!
நீங்கள் போய் படித்தீர்களா?
ஆமாம்! என் தாய் நாடான அமெரிக்காவில் படித்தேன்!
அது மிசிசிப்பி ஆற்றங்கரையில் இருக்கிறது.
3–ம் நூற்றாண்டில் மாயாவிக்கு 12 வயது ஆனதும் இங்கிலாந்துக்கு படிக்கப் போனார்!
இலண்டனில் 1602–ம் ஆண்டு என்பது சேக்ஸ்பியர் வாழ்ந்த காலம்.

மதகுருமாரின் கட்டுப்பாடான ஆசிரமத்தில் அவரை படிக்க வைத்தனர். ஆனால், அவர் காட்டில் வளர்ந்ததால் மதகுரு மார்களிடம் அடங்க மறுத்தார்.
குளோப் தியேட்டர்
அப்போது அங்கே மிகவும் பிரசித்திப்பெற்ற குளோப் தியேட்டருக்குப் போனார்.
அங்கே நாடகத்தில் நடிக்க முயன்றார்.
அற்புதம்! திரும்பவும் அந்தக் காட்சியை நடித்துக்காட்டு!
சரி சேக்ஸ்பியர்!
சிறுவன் படிப்பை விட்டுவிட்ட செய்தி காட்டுக்கு எட்டியது.
2–ம் மாயாவி மகனைத் தேடி இலண்டனுக்குச் சென்றார்.
ரோமியோ! நீ எங்கே இருக்கிறாய்?
ரோமியோ ஜூலியட் நாடகத்தில் தன் மகனைக் கண்டார் மாயாவி.
அப்பா! நீங்களா?
இங்கே என்ன செய்கிறாய்?
நாடகத்தின் இடையில் மாயாவி புகுந்து மகனைப் பிடித்தார். அது சேக்ஸ்பியருக்கு கோபத்தை மூட்டியது.
நாடகத்தில் புகுந்த அந்த காட்டு மிராண்டியைப் பிடி!

வேடத்தை கலைத்துவிட்டு மரியாதையாக என்னுடன் காட்டுக்குள் வா!
இவனிடம் அபார நடிப்புத் திறமை இருக்கிறது!
அப்பா! நான் வரவில்லை!

தந்தைக்கும் மகனுக்கும் டக்கப் போராக இருந்தது.
அப்பா! எனக்கு நடிக்கவே ஆசை!
என்னமும் செய்து தொலை!

மாயாவி! பெண் வேடத்துக்கு ஏன் சீறுகிறார்?
அந்தக் காலத்தில் பெண்கள் மேடை ஏறக்கூடாது! மகனை பெண் வேடத்தில் பார்த்ததும் பொங்கி எழுந்து விட்டார்!

சில ஆண்டுகளுக்குள் சிறுவன் வீரமிக்க இளைஞனாக மாறினான். அப்பாவின் மாணப் படுக்கை கடிதம் வந்தது!
அய்யோ 'அப்பா! நான் அப்பாவை பார்க்க போகிறேன்!
காடு திரும்பியதும் அப்பா இறந்துபோனார். உடனே அப்பாவை மாயாவி முறைப்படி புதைத்து வைத்தான்.
பிறகு அவரே மூன்றாவது மாயாவியாகி விட்டார்.
சரி! அவரிடம் இந்த வைரக்கோப்பை எப்படி வந்தது?
சொல்கிறேன்!
இது என் முன்னோர் 3–ம் மாயாவி ஜூலியட்டாக நடித்தபோது அணிந்த தலைமுடி!
சேக்ஸ்பியர் அவருக்கு நன்றாகத் தெரியும்!

இங்கே சேக்ஸ்பியர் நாடகம் எழுதிய பேனாவும் இருக்கிறது. அவரது நினைவாக...
இந்த வைரக் கோப்பை கதை வீரமிக்க சுல்தான் மமூது வாழ்க்கையில் நடந்த கதை!
3–ம் நூற்றாண்டில் நடந்த கதை.
வெளி ஆளான மமூது காட்டுக்குள் வேட்டையாட வந்ததை மாயாவி பார்த்தார்.
மமூதுவின் எதிரி கும்பல் ஒன்றும் காட்டுக்குள் அவரை தீர்த்துக்கட்ட தயாராக இருந்தன.
படை இல்லாமல் வேட்டையாட வந்த இடத்தில் மமூதுவை தாக்குவது எளிது என்ற நம்பிக்கையில் எதிரிகள் காட்டுக்குள் வந்திருந்தார்கள்.
!
எதிரிகள் மமூதுவின் கூடாரத்துக்குள் நுழைந்தார்கள்.
மமூது! நீ இத்தோடு காலி!
அட கொலைகாரர்கள்...!

துரோகிகளா? உங்களை அனுப்பியது யார்?
நீ செத்ததும் அரியணை ஏறப்போகிறவரின் ஆட்கள் நாங்கள்!
இவரை அழைத்துச் செல்ல வேண்டுமா? எப்படி?
இல்லை! இவனுடைய தலை மட்டுமே போதும்!
அந்நேரம் மாயாவி உள்ளே நுழைந்தார்.
முதலில் என்னோடு மோதுங்கடா!

மாயாவியின் வாளுக்கு முன் எதிரிகளின் வாள் தூள் தூளாகிப் போனது.
மரியாதையாக சரண் அடைந்துவிடுங்கள்! இல்லை கொன்றுவிடுவேன்!
அய்யோ...! எங்களுக்கு உயிர் பிச்சைத் தாருங்கள்.
இருளில் பதுங்கித் தாக்குவது வீரனுக்கு அழகா? வெட்கமாயில்லை!
முகமூடி! என்னைக் கொன்றுவிடுவாயா?
இவர்களுடன் மோதியது உங்களைக் காப்பாற்றத் தான்!
அப்போதுதான் முதன் முதலாக மாயாவி அந்த வைரக் கோப்பையைக் கண்டார்.
உங்களுக்கு உதவ வந்திருக் கிறேன்! என்னைப் பார்த்து பயப்படத் தேவையில்லை!
இனி கொலைகாரர்களின் பயம் இல்லாமல் இருங்கள்! நான் வருகிறேன்!
இரு முகமூடி!

மழுதுவை என் முன்னோர் காப்பாற்றியதில் இருந்து இருவரும் நண்பர் களானார்கள்.
பலே!
வைரக் கோப்பைக்கு இன்னும் வேலை வரவில்லையே?
சொல்கிறேன்!
எனக்கு குழந்தை இல்லாத குறையைப் போக்க உன்னை என் வாரிசாக்குகிறேன்!
மகிழ்ச்சி! ஆனால் அதை ஏற்க முடியாது. ஏன் என்றால் நான் காட்டுக்கு ராஜாவாக இருக்கிறேன்!
நீ என் உயிரைக் காத்தவன். அதனால் இந்த கோப்பையைத் தவிர உனக்கு எது வேண்டுமோ எடுத்துக்கொள்!
அவரது கருவூலத்தைப் பார்த்து மாயாவி வியந்துபோனார்.

இது என்ன கோப்பை!
இது அலெக்சாந்தருடைய கோப்பை! ஒற்றை வைரத்தால் ஆனது!
இது அலெக்சாந்தரிடமிருந்து ஜூலியஸ் சீசருக்கு பிறகு சாலமெனுக்கு – அதன்பின் குப்ளாகானுக்கு பிறகு என்னிடம் வந்தது!
எந்த பானத்தையும் இதில் குடித்தால் தேவாமிர்தம் போல இருக்கும்!
இந்தக் கோப்பையின் பெருமையை கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் முதன்முதலாக மழுதுவிடம்தான் கண்டேன்.
அப்பா! நாங்கள் விளையாடப் போகிறோம்!
இந்தக் கதை வேண்டாமா?
குழந்தைகளுக்கு கதை கேட்க பொறுமை இல்லை!

ஆனால், வைரக் கோட்டையை பற்றிய முழுக்கதையும் எனக்கு வேண்டும்!
மழுது ஒருமுறை ஜினியா நாட்டுக்குச் சென்று வந்தார்.
அங்கு கண்ட அதிசயங்களை என்னிடம் கூறினார்!
எல்லா அதிசயத்தைப் பார்த்திருந்தாலும் மகாராஜாவின் மகள் இளவரசியை போல அழகியை கண்டதில்லை.
இது இளவரசி புரா. என் மகள்!

அவள் எனக்காக பாடினாள். அவள் குரலைக் கேட்டு நான் சொக்கிப்போனேன்!
நண்பனே! இளவரசி புராவின் நினைவு என்னை அலைக்கழிக்கிறது!
அவளை மணக்க விரும்புகிறேன் என்று மகாராஜாவிடம் தெரிவித்தேன். அவரும் சம்மதித்து விட்டார். அதனால் இளவரசியை இங்கே அழைத்து வரவேண்டும்!
அவளை அழைத்துவர நீதான் போகவேண்டும். என் திருமணப் பரிசாக இந்த வைரக்கோப்பையை அவளிடம் கொடு!
!

மணமகளை அவரே அழைத்து வந்திருக்கலாமே!
அதற்கு வேறு காரணம் இருக்கு!
என் முன்னோருக்கும் இதே கேள்வி எழுந்திருக்கிறது!
உங்கள் வருங்கால மனைவியை நீங்களே அழைத்து வரலாமே?
உண்மைதான்! அவ்வளவு தூரம் என்னால் போய் வரமுடியாதே?
காட்டுமிராண்டிகளும், பயங்கர மிருகங்களின் தொல்லையும் வழிநெடுக இருக்கும். அதனால் வேண்டிய அளவுக்கு படை வீரர்களை அழைத்துச் செல்!
ஆனால், என் முன்னோர் எனக்கு துணை எதுவும் வேண்டாம் என்கிறார்!
அது பயங்கரமான ஆபத்து ஆயிற்றே!

நீ என் மகன் போன்றவன். உனக்கு பாதுகாப்பு வேண்டும். அப்படியே இந்த வைரக்கோப்பைக்கும் பாதுகாப்பு வேண்டாமா?


முடிவில் மாயாவி சில வீரர்களுடன் ஜினியா நாட்டை நோக்கிப் புறப்பட்டார்.

ஜினியாவுக்கு தனிமைப் பயணம் ஆபத்து என்பது தெரியும்!


ஆனால், மழுதுவின் படைகள் வழிநெடுக குடித்து, சூதாடி காலங் கடத்தினார்கள்.

இடையே காட்டுமிராண்டிகளின் தாக்குதல்களையும் சந்திக்கவேண்டி இருந்தது.
டுமீல்...!

காட்டு மிருகங்களின் அட்டகாசமும் அதிகமாக இருந்தன.

மமூதுவின் வீரர்கள் வேறு திட்டமிட்டார்கள்.
நாம் வீணாக அவனுடன் சென்று மரணத்தை தழுவு வனதவிட.....!
வேறு என்ன செய்யலாம்!
முகமூடியை கொன்றுவிட்டு வைரக்கோப்பையை கைப்பற்றுவோம்.
மாயாவி அவர்களின் பேச்சைக் கேட்டார்.
வைரக் கோப்பையை விற்று அந்தப் பணத்தை நாம் பங்கிட்டுக்கொள்வோம்! மன்னனிடம் முகமூடி கோப்பையுடன் ஓடி விட்டதாக கூறிவிடுவோம்!
அசத்தலான திட்டம்!
மாயாவி
கோழைகளே! என்னையா கொல்லப் பார்க்கிறீர்கள்!
அப்போது— காட்டுமிராண்டிகளும் தாக்க வந்தார்கள்.
ஏய்... உயிர்பிழைக்க இவர்களை தாக்குங்கள்!

ஏய்... அந்தப் பக்கம் ஓடாதீர்கள்!
ஆனால் படைவீரர்கள் உயிருக்கு பயந்து ஓட்டம்பிடித்தனர்!

சொன்னால் கேளுங்க! வந்திடுங்க!
மமூதுவின் படைக்கு போரிட சக்தியில்லை!

காட்டுமிராண்டிகளின் தாக்குதல்கள் மோசமாக இருந்தது.

முடிவில் படைவீரர்கள் கொல்லப்பட்டு மாயாவி மட்டும் தனித்து விடப்பட்டார்.
ஆனால், மமூதுவின் வருங்கால மனைவிக்கு சேரவேண்டிய வைரக்கோப்பை, பத்திரமாக இருந்தது.
வழிநெடுக பல ஆபத்தான தாக்குல்களை சந்தித்திருக்கிறார்!
உங்களுடைய முன்னோர் ரொம்ப'வும் அடக்கமானவர்தான்!
மாயாவி தன்னந்தனியாக ஜினியா நாட்டுக்கு வந்து சேர்ந்தார்.

மழூது அனுப்பிய ஆள் நான். மகாராஜாவை சந்திக்கவேண்டும்!
சற்றுப் பொறு!
இளவரசி! உன் கணவனிடம் உன்னை அழைத்துப் போக முகமூடி வந்துவிட்டார்!
அய்யோ....!
அரசே! மழூதுவின் தூதுவன் வந்திருக்கிறார்!
அவன் பெரிய வீரனாமே? முதலில் அதை நிரூபித்துக்காட்டச் செய்!

ஏய்... நீ பொய் சொல்லி எங்களை ஏமாற்றி திருட வந்திருக்கிறாய்...!
என்னடா சொன்னாய்... நான் திருடனா?
!
!
மாயாவியின் கோபத்தை கிளறினான்.
நாங்கள் உன்னை உள்ளேவிட மாட்டோம்!
ஏய் மரியாதையாக விடு! முக்கிய வேலையாக வந்திருக்கிறேன்!
நான் சமாதானத் தூதன்!
படார்...!
?

மாயாவி மகாராஜாவை சந்தித்தார்.
நான் மழுதுவின் ஆள்! உங்கள் மகளுக்கு மணப்பரிசு கொண்டு வந்திருக் கிறேன்!
இது அலெக்சாந்தருடைய வைரக்கோப்பை!
எனக்குத் தெரியும்! நான் உன்னை எதிர்பார்த்துத்தான் இருக்கிறேன்!
அப்படியா?
பிறகு ஏன் காவலாளிகளை என்னுடன் மோதவிட்டீர்கள்!
மழுது நீ பெரிய வீரன் என்று பீற்றினான். அதான் சோதனை செய்து பார்த்தேன்!
இளவரசியே! மழுது உனக்காக இந்த வைரக்கோப்பையை பரிசளித்திருக்கிறார்!

எனக்கு எதுவும் வேண்டாம்!
மழூதுவை மணக்க எனக்கு விருப்பமில்லை! என்னை விட்டு விடுங்கள்!
திருமணத்திற்கு முன்பு எல்லாப் பெண்களும் அப்படித்தான் முரண்டுபிடிப்பார்கள்! போகப் போக சரியாகிவிடும்!
அப்பா! அந்த கிழட்டு மழூதுவை மணமுடிக்க எனக்கு விருப்பமில்லை!
நம் எல்லை நாடு அவனுடையது! அவனுக்குப் பிறகு அது நமக்கே வந்துவிடுமே?

அவள் அழுவதைப் பார்த்து மாயாவியின் மனம் இறங்கியது.
அழுதது போதும். பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்!
நான் எப்படி கிழவனை மணமுடிக்க முடியும்!
இளவரசி! உன் அப்பா முடிவு எடுத்து விட்டாரே?
நான் சாகப்போகிறேன்! என்னை யாரும் தடுக்காதீர்கள்!
வேண்டாம்! நில்!
என் மகளுக்கு மணமுடிப்பதில் விருப்பம் இல்லை. நீ வேண்டுமானால் அவளிடம் பேசிப் பாரேன்!
முடிந்தவரை முயலுகிறேன்

இளவரசியிடம் பேசப் பேச அவளது அழகு மாயாவியை பெரிதும் கவர்ந்தது.
இளவரசி! மழுது நல்லவர்! நாணயமானவர்! கண்ணியமானவர்!
உள...உள... உள...ம்!
அவளை நினைக்க முயன்றால் மழுதுவின் மணமகள் ஆயிற்றே என்று மரியாதை தடுத்தது.
எனக்கு அவரை பிடிக்கவில்லை!
காலம் செல்லச் செல்ல எல்லாம் சரியாகிவிடும்!
அவளை தூக்கிப் போகத் துடிப்பாக இருக்கிறது. ஆனால், நடக்குமா?
இளவரசி என்னுடன் பத்திரமாக வருவாளா?
வருவாள்! ஆனால் போகிற பாதைதான் ஆபத்தானது! அவள் ஒரு பொக்கிஷம்!


படைவீரர்களுடன் இளவரசி புறப்பட்டாள்.

வாத்தியம் முழுங்க இளவரசி அனுப்பி வைக்கப்பட்டாள்.

என் முன்னோரும் இளவரசியை விரும்பி யிருக்கிறார்!
பாவம்! அவளுக்கு விருப்ப மில்லாதவனிடம் ஏன் சேர்க்க வேண்டும்!

பயணத்தின் இடையே அங்கங்கே முகாமிட்டார்கள்.
சாப்பிடு இளவரசி!
எனக்கு பசியில்லை!


மீண்டும் பயணம் தொடர்ந்தது.

திடீரென்று வழியில் புயல் அடித்தது. இளவரசியை தூக்கிக்கொண்டு மாயாவி குகையை அடைந்தார்.
!!

புயல் ஓய்ந்த பின் வெளியே வந்து பார்த்தார் மாயாவி.
படைவீரர்கள் உயிருக்கு பயந்து திரும்பிவிட்டாரகள் போலிருக்கிறது. எஞ்சியிருப்பது நாங்கள்தான!
புயலுக்குப்பின் வைரக்கோப்பையும் வண்டிக்குதிரையும்தான் மீதம் இருக்கிறது!
இளவரசி! புறப்படலாமா?
என்னை இங்கேயே விட்டுவிடு!
இல்லை இளவரசி! புறப்பட்டேயாகனும்!

உனக்கு அளிக்கப்பட்ட திருமணப் பரிசு புயலில் தப்பி யிருக்கிறது!
எனக்கு அது தேவையில்லை. நீயே வைத்துக்கொள்!
மமூதுவை மணக்க என்னை கூட்டிச் செல்லாதே! வேறு எங்காவது அழைத்துப் போ!
அப்படிச் சொல்லாதே புரா! உன் அப்பா மமூதுவிடம் அழைத்துச் செல்லச் சொன்னார். ஆனால் நீயோ வேறு இடத்துக்கு போகச் சொல் கிறாய்?
நீ என் மகன் போன்றவன்! மணமகளை அழைத்து வருவது உன் பொறுப்புதான்!
இளவரசியை மமூதுவிடம் அழைத்துச் செல்வதே மரியாதை!

திடீரென்று இளவரசி குதிரையில் இருந்து கீழே குதித்தாள்.
மழுதுவை நான் திருமணம் செய்வதைவிட சாவதே மேல்!
நான் சாகப் போகிறேன்!
இளவவசி நில்லுங்கள்!
மாயாவி அப்படியே குதிரையில் வந்து இளவரசியை 'லபக்'கென்று தூக்கினார்

என்னை ஏன் தடுத்தீர்கள்! நான் சாகப்போகிறேன்!
அப்படிச் சொல்லாதே இளவரசி!
திடீரென்று வழிப்பறிக் கொள்ளையர்கள் முற்றுகையிட்டார்கள்.
ஆய்...ஆய்...!
மாயாவி வழிப்பறிக் கொள்ளையர்களிடம் போராடினார்.
திருட்டு நாய்களே!
மரியாதையாக திரும்பிச் சென்றுவிடுங்கள்! இல்லை உடம்பில் உயிர் இருக்காது!
நான் மழுதுவை மணப்பதைவிட இந்த முகமூடிவீரனை மணக்க ஆசைப்படுகிறேன்!

உங்களுக்கு காயம் எதுவும் இல்லையே?
அதெல்லாம் ஒன்றும் இல்லை இளவரசி!
பயந்துபோய் விட்டாள்! சிறிது ஓய்வு எடுத்தால் சரியாகி விடும்!
ஆயா! எங்கள் காதல் கைகூட வேண்டும்! என்னை மகிழ்விக்க ஏதாவது மருந்து கொடு!
முகமூடி! இளவரசி உம்மை விரும்புகிறாள். பிறகு ஏன் மமூதுவை அவள் மணக்க வேண்டும்!
மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் நான் கொடுத்த வாக்கு?

மாயாவி பயங்கர சிந்தனையில் ஆழ்ந்தார்.
ஆயா மருந்து தயாரித்தாள்.
என்னது இது?
மருந்து!
சோகத்தை நீக்கும் அற்புத மருந்து. உனக்கு மகிழ்ச்சி ஏற்பட இதை குடி இளவரசி!
மிக்க மகிழ்ச்சி!
சுவையாக இருக்கிறதே?
முன்பின் அறிமுகமில்லாத உன்னை நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன்!
நானும் உன்னை விரும்பு கிறேன்!


பிறகு—
உண்மைதானா
உண்மைதான் நான் அவர்களை பார்த்தேன்!


மமூது அரண்மனையில்—
அரசே! இளவரசியோடு முகமூடி வந்துகொண்டு இருக்கிறானாம்!
முகமூடி நம்பத் தகுந்தவன்!


மணமகளை வரவேற்க குதிரைவீரர்கள் புறப்பட்டார்கள்.

ஆகா! அழகான இளவரசி எனக்கு மனைவியாகப் போகிறாள்!
மழூது பூரிப்பில் இருந்தார்.
அதற்குள்—
ஆயா! இந்த மருந்து எதற்காக?
இது உம் அறிவை தெளியவைக்கும்! இளவ்ரசி ஒருக்காலும் மழூதுவை மணக்கமாட்டாள்!
உன் வீரம் அவளை மரணத்தில் இருந்து விடு வித்துவிட்டது.
இனி நீங்கள் இருவரும் காலம் முழுக்க மகிழ்ச்சியாக இருங்கள்! உங்களை எவராலும் பிரிக்க முடியாது!
பிரியவே மாட்டோம்!
ஆமாம் ஆயா!

மருந்து சாப்பிடுவதற்கு முன்பே நான் உன்னை விரும்பிவிட்டேன்!
நானுந்தான்!

நாம் எப்பொழுதும் இப்படியே இருப்போம்!
அதுதான் என் விருப்பமும்!

இளவரசியை வரவேற்க வந்த குதிரைவீரர்கள் அந்தக் காட்சியைக் கண்டனர்.
இவர்கள் நம் இளவரசியும் முகமூடியுமா?
நம்பவே முடியவில்லையே?

இவர்கள் மழுதுவின் அந்தப்புரத்தை அலங்கரிக்க வந்த இளவரசியார் தானே?
ஆமாம்! ஆனால் அப்படி ஒருபோதும் நடக்காது!
நான் உங்கள் மன்னரை மணக்க விரும்பவில்லை. போய்விடுங்கள் இங்கிருந்து!
இந்த வைரக்கோப்பையை மழுதுவிடம் சேர்த்துவிட்டு, திட்டம் மாறிவிட்டதாக சொல்லிவிடு!
சற்றுப் பொறு!

நாம் இப்போது என்ன செய்வது? இளவரசி இல்லாமல் போனால் மன்னர் நம் தலையை வாங்கிவிடுவார்!
முகமூடி! நீ எங்கள் கைதி! மரியாதையாக வந்துவிடு! முரண்டுபிடித்தால்...!
நான் அதற்கும் தயாராகவே இருக்கிறேன்!
பிடி இவனை!
வாருங்கள்!

ஒருவன் மாயாவியை நோக்கிச் சுட்டான்.
டமால்....!
ஆ

டுமீல்....!
ஆ....!

மாயாவி சுருண்டு விழுந்தார்.
இளவரசி! அங்கே உங்கள் கணவர் உங்களுக்காக காத்துக்கிடக்கிறார்!

அவசரப்படாதே! இவருக்கு மருந்து போட்டுவிட்டு வருகிறேன்!
வீண்வேலை இது! எப்படியும் மமூது இவன் தலையை சீவப்போகிறார்!

குதிரை வீரர்கள் அவர்களை அரண்மனைக்கு அழைத்து வந்தனர்.
மாயாவி மயங்கிக்கிடந்தார்.

முகமூடி வைரக் கோப்பையை தரமுயன்றான்!
மணமகளுக்குப் பதிலாக கோப்பையை தந்தானா?

துரோகி! உன்னை எப்படி நம்பினேன். முடிவில் என் மணமகளை கடத்த முயன்றாய்? இவனை சிறையில் போடு!
இவளை அறைக்கு அழைத்துச் செல்! பாவம் பேதையின் மனதை மாற்ற முயலுகிறான்!

மாயாவி சிறையில் அடைக்கப்பட்டார்.
உன் தலையை சீவாமல் விடமாட்டேன்! நீ குணமானதும் மிருகத்தோடு மோத வேண்டும்!

அவன் என் உயிர் காத்தான். மகனாக பாவித்தேன். வாரிசாககூட நியமிக்க நினைத்தேன்!
அப்புறம் என்னாச்சு!
டயானா! இரு சொல்கிறேன்!

ஆயாவின் மருந்து விரைவிலேயே குணமாக்கிவிட்டதே? புராவை எப்படியாவது தேடிக் கண்டு பிடிக்கணும்!
ஆயா! அவர் இல்லாமல் நான் வாழமாட்டேன்!
இளவரசி! நம்பிக்கையை தளரவிடாதே?
அரசே! முகமூடி குணமாகிவிட்டார். இனி மிருகத்தோடு மோதலாம்!
மோதட்டும்! இளவரசியை அழைத்துவா!

என் நம்பிக்கைக்குரியவன் என்னை ஏமாற்றிவிட்டான்! அவன் செத்ததும் நம் திருமணம்!
அது நடக்காது!
கேட்டாயா?
திருமணத்துக்குமுன் எல்லாப் பெண்களும் பேசுகிற பேச்சுதான் இது!
மைதானத்தில் மோதல் தொடங்க இருந்தது.
நாம் எங்கிருக்கிறோம்!
நீயே பாரேன்!
இங்கே பயங்கரப் போட்டி நடக்கப் போகிறது!
மைதானத்துக்குள் மாயாவி நிறுத்தப்பட்டார்.
வாளால் போராடு! உன் குதிரையும் உன்னோடு சாகட்டும்!
?

மைதானத்துக்குள் புலிகளை திறந்துவிட்டனர்.
மூன்றுமே பயங்கர பசியில் இருக்கின்றன என நினைக்கிறேன்!
அரசே! அவரை காப்பாற்றுங்கள்!
ஆகா...!
எத்தனை புலிகள் விட்டாலும் என்னை அசைக்க முடியாது!

அதற்குள் மேடையில் இருந்த இளவரசியும், சட்டென்று மைதானத்துக்குள் குதித்தாள்.
புரா...!
நானும் அவரோடு சாகிறேன்!
இளவரசி மாயாவியை நோக்கி ஓடினாள். ஆனால் அந்தப் புலிகள் இளவரசியை நோக்கி ஓடின..
!
மாயாவி இளவரசியை காப்பாற்ற பாய்ந்தார்.

வீரர்களே புலிகளை சுட்டுத் தள்ளுங்கள் !
டுமீல்...!
டுமீல்...!
டுமீல்...!


புலி அருகில் வருவதற்குள் மாயாவி இளவரசியை குதிரையில் தூக்கிக் கொண்டார்.

வீரர்கள் குறிதவறியது.
டுமீல்...!
டுமீல்....

எப்படியோ உன்னைக் காப்பாற்றி விட்டேன்!
இவர்தான் சுத்தவீரர்!
அபாரம்!
கூடியிருந்தவர்கள் மாயாவியின் வீரச் செயலை பாராட்டினார்கள்.
அரசே! அவர்களைச் சுட்டுத்தள்ளவா!
வேண்டாம்! அவர்களை தடுத்து நிறுத்து!
மாயாவி குதிரையில் நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்து மைதானத்தின் தடுப்புச் சுவரைத் தாண்டினார்.

மழூது! இனி உன்னால் எங்களை பிடிக்க முடியாது
மழூதுவின் ஆட்கள் மாயாவியை பின்தொடர்ந்தாலும் அவர்களால் எட்டிப்பிடிக்க முடியவில்லை.
இளவரசி! இனி ஆபத்தில்லை! பயப்படவும் தேவை இல்லை!

இது என்ன பொன் போல மின்னுது!
இது தங்கக் கடற்கரை!
இதில் பாதிக்குப் பாதி தங்கம்!
அந்த மலைமுகடு உம்மைப் போலவே இருக்கிறதே?
ஆமாம்!
இவர்கள் நம் தோழர்கள்! நம் இருப்பிடம் வந்தாச்சு!
!
மாயாவி! மாயாவி!

அடுத்து நம்ம திருமணம்தான்!
ரொம்ப மகிழ்ச்சி!
அவர்கள் உமக்குத் தூரோகம் விளைவிக்கவில்லை! நான் கொடுத்த மாய மருந்து காதல்வசப் படுத்தியிருக்கிறது!
மாய மருந்தா?
காட்டில் உள்ள மதகுருமார்கள் தலைமையில் மாயாவி இளவரசியின் திருமணம் முடிந்தது.
திடீரென்று மமூதுவின் படைகள் மாயாவியைத் தேடி காட்டுக்குள் வந்தன.

முகமூடி! நான் உன்னுடன் சண்டையிட வரவில்லை! உன்னுடைய திருமணத்தை காணவந்தேன்!
!!

ஆயா கொடுத்த மருந்து பற்றிச் சொன்னாள். இளவரசி சாவதைத் தடுக்கத்தான் உனக்கு மருந்து கொடுத்தாளாம்!
அது உண்மை என்றதும் மனம் மாறி விட்டேன்!

காதலனுக்காக உயிரைக் கொடுக்கக்கூட தயாராக இருந்தாளே?

சாவைவிட உம் காதல் வலிமை யானது!
புரா! உன் திருமணத்தை உன் அப்பாவுக்குபதில் நான் நடத்தி வைக்கிறேன்!
எப்படியோ நாம் நினைத்தபடி மணமக்களாகி விட்டோம்!
விலைமதிப்பில்லாத அலெக்சாந்தருடைய இந்த வைரக்கோப்பையை என் திருமணப் பரிசாக உங்களுக்கு அளிக்கிறேன்!
மிகக நன்றி!

மக்களைப் பெற்று மகிழ்ச்சியாக வாழுங்கள்!

அவர்களுக்கு பிறந்த குழந்தைதான் நான்காவது மாயாவி!
உண்மையிலேயே இது அற்புதமான காதல் கதைதான்!

என் முன்னோர்கள் உண்மையை மட்டும்தான் எழுதிவைப்பார்கள்!
இந்தக் கோப்பை நம்மிடம் இருப்பது எவ்வளவு புனிதமானது!
(முடிந்தது)

தங்கக் கிளி

அமுதா கணேசன்

14

முன்கதை சுருக்கம்:-

சகல சக்திகளைப் பெற்ற மாயன் என்ற மந்திரவாதி, எழில்புரி நாட்டு இளவரசி பொற்செல்வியின் அழகில் மயங்கி அவளை மணக்க விரும்பினான். அவள் மறுக்கவே எழில்புரி நாட்டையே கல்லாக்கி விட்டான். பொற்செல்வி மனம் மாறும்வரை நீ தங்கக்கிளியாக மாறிப்போ. என்று சாபமிட்டான். தன்னையும் தன் நாட்டையும் மீட்க ஒரு வீரனைத் தேடி அலைந்தாள். முடிவில் சிங்கபுரி இளவரசன் அஞ்சாநெஞ்சனை கண்டுபிடித்து அவனிடம் உதவி பெற முயன்றாள்.

"இளவரசியா? இப்பொழுது உங்கள் முன்தான் இருக்கிறாள்" என்றாள் பொற்செல்வி.

"என்முன்னா?" என்ற அஞ்சாநெஞ்சனும், சுற்றும்முற்றும் பார்த்தான். என்முன் அரசர் இருக்கிறார். அவையில் அமைச்சர்கள், அறிஞர்கள், வீரர்கள் இருக்கிறார்கள். இளவரசி இல்லையே!"

"அந்த அபாக்கியவதி நான்தான்" என்று பொற்செல்வி துயரத்துடன் சொன்னாள்.

"நீயா? நீ இளவரசியாகத்தான் இருக்கவேண்டும் என்று நினைத்தேன்."

"எப்படி?"

"நீ அவ்வளவு அழகாக இருக்கிறாய்! உன் குரலும் இனிமையாக

இருக்கிறது. ஆமாம், உன்னை மட்டும் மந்திரவாதி கல் ஆக்க வில்லையா?"

"இல்லை."

"ஏன்?"

"அவனை மணந்துகொள்ள சம்மதித்து, அவன் இருக்கும் இடத்துக்கு நான் பறந்து வரவேண்டும். ஆகவே, என்னைக் கிளி ஆக்கினான்."

"அப்படியானால், மந்திரவாதி இங்கே இல்லையா?"

"இல்லை. ஒரு மலைக் குகையில் இருக்கிறான். இன்று என்னைப் பார்க்க இங்கே வந்து இருந்தான்."

"இளவரசி! நீ இனி கவலைப்படவேண்டியது இல்லை. உனக்கு சுயஉருவம் பெற்றுக் கொடுப்பேன்."

"எனக்கு அது முக்கியம் அல்ல. மன்னரும், மக்களும் உயிர்பெற வேண்டும்."

"நிச்சயம் உயிர் பெறச் செய்வேன்."

"ஆனால், நீ மிகவும் கவனமாக இருக்க வேண்டும்" என்று அஞ்சாநெஞ்சன் எச்சரித்தான்.

"ஏன்?" என்று இளவரசி கேட்டாள்.

"வேழநாட்டுக்கு நீ போனது உண்டா?"

"ஒரு வேடன் என்னைப் பிடித்து வேழநாட்டு வேந்தனிடம் விற்றான். வேந்தன் தன் மகளுக்குப் பரிசாக என்னைத் தந்தான். நான் தந்திரமாகத் தப்பி வந்துவிட்டேன்."

"உன்னைப் பிடிக்க அரசன் தீவிர முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறான்."

"உண்மையாகவா!"

"ஆமாம். தங்கக்கிளியை பிடித்து வருகிறவர்களுக்கு தன் மகளை மணம் செய்து கொடுத்து, முடிசூட்டியும் வைப்பதாக அரசன் பறையறைந்து அறிவித்து இருக்கிறான். வரும் வழியில் இந்தச் செய்தியை நான் கேள்விப்பட்டேன். உன்னைப் பிடிக்க பல நூற்றுக்கணக்கான பேர் புறப்பட்டு இருப்பார்கள். எனவே, நீ கவனமாக இருக்க வேண்டும்" என்று அஞ்சாநெஞ்சன் சொன்னான். இதைக் கேட்ட இளவரசி பொற்செல்வி மிகவும் கவலைப்பட்டாள்.

"மீண்டும் பிடிபட்டுவிட்டால், நான் என்ன செய்வேன்?" என்று கலங்கினாள்.

"நீ வெளியில் எங்கும் போகாதே. இங்கேயே இரு" என்று அஞ்சாநெஞ்சன் சொன்னான்.

"நானும் உங்கள் கூடவே வருகிறேன்" என்றாள் பொற்செல்வி.

“நானே மந்திரவாதியைத் தேடிப் போகிறேன். என் பயணம் எவ்வளவு கரடுமுரடாக இருக்கும் என்று எனக்கே தெரியாது. மந்திரவாதியுடன் நான் பயங்கரமாகப் போரிட வேண்டியிருக்கும். என்னுடன் வந்து, நீயும் ஆபத்துக்களில் அகப்பட்டுக்கொள்ளக்கூடாதே” என்று அஞ்சாநெஞ்சன் சொன்னான்.

“இங்கே நான் தனிமையில் இருப்பதும் ஆபத்துதானே? உங்களுடன் இருந்தால், எனக்கும் பாதுகாப்பாக இருக்கும். உங்கள் துணையோடு இருப்பதால் நான் பயம் இல்லாமல் இருப்பேன்” என்று இளவரசி கூறினாள். இது சரி என்றே அஞ்சாநெஞ்சனுக்கும் பட்டது.

“நமது பயணத்தை எப்பொழுது தொடங்கலாம்?” என்று அவன் கேட்டான்.

“ஒன்றே செய்யினும் நன்றே செய்க; நன்றே செய்யினும் இன்றே செய்க” என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நாம் இப்பொழுதே புறப்படலாம்” என்று இளவரசி சொன்னாள்.

அஞ்சாநெஞ்சனும் கிளம்பத் தயார் ஆனான்.

இருவரும் அரண்மனையில் இருந்து வெளியில் வந்தார்கள்.

அஞ்சாநெஞ்சன் குதிரை மீது ஏறிக்கொண்டான்.

“இளவரசே! நீங்கள் குதிரையில் முன்னே செல்லுங்கள். உங்கள் பின்னே நான் பறந்து வருகிறேன்” என்று இளவரசி சொன்னாள். இருவரும் சென்றார்கள்.

மலைநாட்டு இளவரசன் புலிக்கண்ணன் தங்கக்கிளியை தேடி காடு மலை எங்கும் அலைந்தான். அலைந்து அலைந்து மிகவும் களைத்துப் போனான். ஆனால், முயற்சியைக் கைவிடவில்லை.

தங்கக்கிளியை பிடித்து சென்றால், இளவரசி பவளம் கிடைப்பாள். வேழநாடும் கிடைக்கும். எனவே, தளர்ந்துவிடாமல் முயற்சியைத் தொடர்ந்துகொண்டு இருந்தான்.

ஒரு நாள் மாலையில் ஒரு காட்டு வழியே புலிக்கண்ணன் போய்க் கொண்டு இருந்தான். பொழுது இருட்டிக்கொண்டு வந்தது. சூரியன் மேற்கு வானில் அடைந்துகொண்டு இருந்தான்.

இருட்டுமுன் காட்டுக்கு வெளியில் சென்றுவிடலாம் என்று, குதிரையை வேகமாக விரட்டினான். ஆனால், போகப் போக ஒரே காடுதான். கண்ணுக்கு எட்டியவரையில் ஒரே மரங்கள். ஆள் நடமாட்டம் இல்லை. அருகில் ஊர் இருப்பதுபோலவும் தெரியவில்லை.

“இனி போவது ஆபத்து” என்று புலிக்கண்ணன் நினைத்தான். எனவே, குதிரையை பிடித்து இழுத்து நிறுத்தினான்.

இரவுப் பொழுதை எங்கே கழிப்பது என்று சுற்றும் முற்றும்

பார்த்தான். ஓர் உயர்ந்த மரம் இருந்தது. குதிரையை மரத்தடியில் கட்டிப் போட்டுவிட்டு அவன் மரத்தின் மீது ஏறிக்கொண்டான்.

அவன் மிகவும் களைப்பாக இருந்தான். பசி வேறு. அவனிடம் தண்ணீர்ப்பை மட்டுமே இருந்தது. மரங்களில் இருந்து சில பழங்களை பறித்துத் தின்றான். தண்ணீர் குடித்தான், சாப்பாடு முடிந்தது.

பெரிய கிளை ஒன்றில் அமர்ந்து, நன்றாக சாய்ந்து அமர்ந்து கொண்டான். கொஞ்ச நேரத்தில் தூங்கிப் போனான்.

நள்ளிரவு இருக்கும். ஒரு பெண் பயங்கரமாக அலறும் ஓசை கேட்டது. புலிக்கண்ணன் திடுக்கிட்டு விழித்துக்கொண்டான்.

என்ன ஓசை? எங்கேயிருந்து வந்தது என்று பார்த்தான். எதிரில் ஒரே இருட்டாக இருந்தது. ஒன்றுமே தெரியவில்லை. பின்பக்கம் திரும்பிப் பார்த்தான். பார்த்ததும் ஆச்சரியப்பட்டான். சற்று தூரத்தில் ஒரு விளக்கு வெளிச்சம் தெரிந்தது.

நடுக்காட்டில் விளக்கு! எப்படி வந்தது. அங்கே யாரும் இருக் கிறார்களா? அங்கே இருந்துதான் அந்தக் குரல் கேட்டதா?

அவன் மரத்தின் மீது ஏறியபொழுது அங்கே எந்த வெளிச்சமும் இல்லை. ஒரே இருட்டுதான். இப்பொழுது விளக்கு ஒளி தெரிகிறது. காலையில் போய்ப் பார்க்கலாம் என்றால், விளக்கு மறைந்துவிட்டால் என்ன செய்வது? எனவே இப்பொழுதே போய்ப் பார்த்துவிட விரும்பினான்.

மரத்தில் இருந்து வேகமாக இறங்கினான்.

மரத்தடியில் கட்டிப்போட்டு இருந்த குதிரையை அவிழ்த்து கையில் பிடித்துக்கொண்டான்.

அதன்பின் விளக்கு வெளிச்சத்தை நோக்கி நடந்தான்.

மரத்தில் இருந்து பார்க்கும்பொழுது விளக்கு வெளிச்சம் அருகில் இருப்பது போல இருந்தது. ஆனால் நடந்து போகப் போக வெளிச்சம் தள்ளிக்கொண்டு போவதுபோல இருந்தது. வெகுநேரம் கழித்துத்தான், வெளிச்சத்தை அடைந்தான்.

நடுக்காட்டுக்குள் ஒரு காளி கோவில் இருந்தது. அந்தக் கோவிலில் ஒரே ஒரு விளக்கு எரிந்துகொண்டு இருந்தது.

கோவிலில் ஒரு பலி பீடம் இருந்தது. அந்த ப்லி பீடத்தில் ஓர் இளம் பெண் வெட்டப்பட்டுக் கிடந்தாள். அவள் தலைவேறு உடல்வேறு தனியாகக் கிடந்தன. இரத்தம் ஓடி உறைந்தது.

அந்தக் குருதியை ஒருவன் ஒரு குடுவையில் சேகரித்துக்கொண்டு இருந்தான்.

அவனைப் பார்த்தால் மந்திரவாதி போல இருந்தது. அவன்தான்

அந்தப் பெண்ணை கொலை செய்து இருக்க வேண்டும். அவன் அருகில் இரத்தம் படிந்த பெரிய அரிவாள் ஒன்று கிடந்தது.

ஆள் அரவம் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான்.

புலிக்கண்ணனைப் பார்த்ததும், அவன் சட்டென்று அரிவாளைக் கையில் தூக்கினான்.

"நீ யார்? இந்தக் காட்டுக்குள் இந்நேரம் எப்படி வந்தாய்?" என்று புலிக்கண்ணன் திரும்பிக் கேட்டான்.

"அதைக் கேட்க நீ யார்?" என்று அவன் வினவினான்.

"நீ கொலை செய்து இருக்கிறாய்! அதுபற்றி கேட்க யாருக்கும் உரிமை உண்டு."

"இது கொலை அல்ல பலி."

"பலி என்றாலும் கொலைதான்."

"என் வழியில் குறுக்கிடாதே. குறுக்கிட்டால், உனக்கு இதே கதிதான்."

"இதற்கு எல்லாம் பயந்தவன் அல்ல நான்" என்ற புலிக்கண்ணன் சட்டென்று வாளை உருவினான்.

உடனே அந்த ஆள் ஒரு கயிறை எடுத்து வீசினான்.

பாம்பு போல நெளிந்து, நெளிந்து வந்த கயிறு, புலிக்கண்ணனைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டியது.

"அடடா! நீ ஒரு மந்திரவாதியா? இதை முதலிலேயே சொல்லி யிருக்கக் கூடாதா?" என்று புலிக்கண்ணன் கேட்டான்,

"நான் யார் என்று இப்பொழுது புரிந்ததா?" என்று மந்திரவாதி கூறினான்.

"புரிந்தது. கட்டுகளை அவிழ்த்துவிடு. உன்னைத் தேடித்தான் வந்தேன்" என்று புலிக்கண்ணன் பேச்சை மாற்றினான்.

"என்னைத் தேடியா? எதற்காக?" மந்திரவாதி கேட்டான்.

"அவிழ்த்துவிடு. எல்லாம் சொல்லுகிறேன்" என்று புலிக்கண்ணன் சொன்னான்.

மந்திரவாதி அவனை அவிழ்த்துவிட்டான்.

(தொடரும்)

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

யார் நல்லவர்?

ஒரு ராஜாவுக்கு மூன்று மனைவிகள். ஒரு நாள் ராஜா வேட்டைக்குப் போய்விட்டு வந்தார். அவருக்கு நல்ல பசி.

முதல் மனைவியிடம் போய், "எனக்கு பசிக்கிறது. சோறு போடு" என்று கேட்டார். "அடுத்த வீட்டுக்காரி உலக்கை குத்தி என் கை வீங்கிப் போனது. என்னால் சோறு போட முடியாது" என்று சொன்னாள் முதல் மனைவி.

ராஜா இரண்டாவது மனைவியிடம் போய், "எனக்கு பசிக்கிறது.

சோறு போடு" என்று கேட்டார். "பஞ்சணையில் படுத்து உறங்கியதால் என் முதுகு புண்ணாகிவிட்டது. என்னால் சோறு போட முடியாது" என்று சொன்னாள் இரண்டாம் மனைவி.

ராஜா மூன்றாவது மனைவியிடம் போய் "எனக்கு பசிக்கிறது. சோறு போடு" என்று கேட்டார். "பட்டுப்போல் நிலா அடித்து என் மேனி புண்ணாகிவிட்டது. என்னால் சோறு போட முடியாது" என்று சொன்னாள் மூன்றாம் மனைவி.

இவர்களில் யார் நல்லவர்?

விடை:-

ராஜாதான் நல்லவர்.

இவர்களில் யார் நல்லவர் என்றுதானே கேட்டோம்.

மனைவிமார்களில் யார் நல்லவர் என்று கேட்கவில்லையே.

அதனால் ராஜாதான் நல்லவர்!

என் வீடு!

தமிழ்நாடு என்பது என் வீடு
தமிழினம் எல்லாம் என் உறவு
அமிழ்து என்பது என் மொழியே
அன்பைத் தருதல் என் கடனே
கள்ளம் இன்றி வாழ்ந்திடுவோம்
கயமை நினையா தமிழ்மறவர்
உள்ளம் வெள்ளை என்பதேயாம்
உரைக்கும் தமிழ்சொல் கேளீரோ?

—பாவலர் செந்தமிழ்தாசனார்.

வழியை கண்டுபிடியுங்கள்!

தவளை தன் உணவைத் தேடி அலைந்துகொண்டிருந்தது. அப்போது தவளையின் கண்ணில் ஒரு தும்பி தட்டுப்பட்டது. ஆனால், தும்பி இருக்கும் இடத்துக்குச் செல்ல தவளைக்கு வழி தெரியவில்லை. உங்களுக்கு வழி தெரிந்தால் தவளையை அழைத்துச் செல்லுங்களேன்!



கள்ளனுக்குள் கள்ளன்
நொடிக்கு நொடி வெடிக்கும் துப்பாக்கிகளின்
உறுமல்கள் நிறைந்த மர்மக் கதை!
படிக்கத் தவறாதீர்கள் !
செப்டம்பர் 1-ந்தேதி
வெளிவருகிறது!
“ராணி காமிக்ஸ்”, சென்னை-600 007.

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

- * அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
- * புராண படக்கதை
- * துப்பறியும் படக்கதை
- * குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
- * மாயாஜால சிறுவர் தொடர்கதை
- * சிறுகதைகள்
- * பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் இலவச இணைப்பாக 32 பக்க வண்ண புத்தகம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

ஆசிரியர்களின் தேர்வே
அப்ஸரா ப்யூட்டி பென்சில்கள்
ஆழ்ந்த கருமை நிறத்தில் எழுதுகிறது
முனை அதிகூர்மையாகிறது
Apsara
ப்யூட்டி
பாண்டட் லெட் ★ ஹெச்பி பென்சில்கள்
ஒவ்வொரு 10 அப்ஸரா
பென்சில் பேக்குகளுடன்
ப்ரெஸ்-ஃபிட் ஷார்ப்னர்
இச்சலுகை ஸ்டாக்
உள்ள வரை மட்டுமே
ஹிந்துஸ்தான் பென்சில்ஸ்
வழங்கும் ஒரு தரமான